. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.04.2026 • மலர் 04 • இதழ்: 106 • Edition : Nagercoil • 16.04.2026 • Vol : 04 • Issue : 106 • Page : 4 • Rs. 5/-

## நாகர்கோவிலில் பிரதமர் மோடி ரோடு ஷோ:

# மோடி... மோடி... என மக்கள் ஆர்ப்பரிப்பு

கன்னியாகுமரி, ஏப்.16

தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில், மாநிலம் முழுவதும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்து தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்த நிலையில், கன்னியாகுமரி மாவட்ட தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, பிரதமர் நரேந்திர மோடி இன்று நாகர்கோவிலில் பிரம்மாண்ட வாகன பேரணி நடத்தி வருகிறார். முன்னதாக டெல்லியில் இருந்து பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தடைந்தார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் பிரதமர் மோடி நாகர்கோவில் வந்து சேர்ந்தார்.

தொடர்ந்து, வேப்பமூடு பகுதியில் இருந்து வடசேரி சாலை வரை திறந்தவெளி வாகனத்தில் சுமார் 1.5 கி.மீ. தூரத்திற்கு பிரதமர் மோடி வாகன பேரணி மேற்கொண்டு வருகிறார். இந்த வாகன பேரணியில் பிரதமர் மோடியுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, பா.ஜ.க. மூத்த தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

வழிநெடுகிலும் பிரதமர் மோடிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி தொண்டர்களும், பொதுமக்களும் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.



நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளர் எம்.ஆர்.காந்தியை ஆரத்தழுவி வாழ்த்து தெரிவித்தார் பிரதமர் மோடி! அங்கு திரண்டிருந்த மக்களிடம் தாமரை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

## சொந்த வீட்டில் கூட பாதுகாப்பாக இருக்க முடியாத சூழல் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது: டிடிவி



சென்னை, ஏப்.16

திமுக ஆட்சியில் கேள்விக்குறியான பெண்களின் பாதுகாப்பு தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சியில் உறுதியாக மீட்டெடுக்கப்படும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே தனது வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவியிடம், கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் சிலர் பாலியல் ரீதியாக அத்துமீறலில் ஈடுபட்டதோடு, கண்மூடித்தனமான தாக்குதலையும் அரங்கேற்றியதில் அம்மாணவி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

தலைநகர் சென்னையில் தொடங்கி கடைக்கோடி கிராமங்கள் வரை கட்டுப்படுத்தவே முடியாத அளவிற்கு புரையோடிப் போயிருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் சாலைகள், பேருந்து, ரெயில் நிலையங்கள், விமானங்களை தொடர்ந்து தன்னுடைய சொந்த வீட்டில் கூட பாதுகாப்பாக இருக்க முடியாத சூழல் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து விற்பனை செய்யப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் அவர்களின் எதிர்காலம் வீணாவதோடு, அந்த கொடிய வகைப் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களால் அரங்கேற்றப்படும் கொலை, கொள்ளைகளும், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்களும் சட்டம், ஒழுங்கு சீர்கேடுகளின் அடையாளமாக தமிழகத்தை மாற்றிவிட்டன.

எனவே, கல்லூரி மாணவி மீது கண்மூடித்தனமான தாக்குதலில் ஈடுபட்ட அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையினரை வலியுறுத்தும் அதே நேரத்தில், தமிழகத்தில் அடுத்து மலரப்போகும் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என்ற உத்தரவாதத்தை மக்களிடம் அளிக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.




தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்


குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 - 70102 64701

## தமிழ்நாட்டுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும்

# அரசமைப்பு திருத்த மசோதாவை திரும்பப் பெறுக: தவெக தலைவர் விஜய்



சென்னை, ஏப். 16

"தொகுதி மறுவரையறை ஒன்றிய அரசின் பாரபட்சமான நடவடிக்கை. எனவே, தென் மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அரசியலமைப்பு (131வது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேற்றும் முயற்சியை கைவிட வேண்டும்," என்று தவெக தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக விஜய் தனது எக்ஸ் சமூகவலைப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், "ஒன்றிய அரசு, மக்களவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போதுள்ள 543இலிருந்து 850 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026' மூலம், மக்களவையின் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை முன்மொழிந்துள்ளது.

இந்த மசோதா, நாளை தொடங்க உள்ள நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் வரவேற்கிறது.

மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைத் தவிர்த்து, 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேறினால், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும், வட மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும் இடையே உள்ள விகிதாசார வேறுபாடு, வெகுவாக அதிகரிக்கும். அப்படி நிகழ்ந்தால், மொழி, கலாசாரம் மற்றும் மாநில உரிமைகள் சார்ந்த சட்டங்கள் இயற்றுதல் மற்றும் ஒன்றிய அரசின் கொள்கைகள் வகுத்தல் உள்ளிட்டவற்றில் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைந்து, வட மாநிலங்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்.

இதனால் தென் மாநில மக்களின் கோரிக்கைகள், குறிப்பாக ஒன்றிய அரசின் அறிவிப்புகளை முழுமையாகக் கடைப்பிடித்த தமிழ்நாட்டு மக்களின் குரல், நாடாளுமன்றத்தில் ஒலிக்காமல் போகும்.

இது ஒன்றிய அரசின் பாரபட்சமான நடவடிக்கை ஆகும். ஒன்றிய அரசின் அறிவிப்பை, ஆண்டாண்டுக் காலமாகக் கடைப்பிடித்த ஒரு மாநிலத்திற்கு 'தண்டனை'யையும், அதைப் பின்பற்றாத மாநிலங்களுக்கு 'வெகுமதி'யையும் தருவது போல் இந்த மசோதா நிறைவேற்றம் அமைகிறது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், நிதிப் பகிர்விலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை விகிதாசாரம் மாறுவது, மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலும் எதிரொலிக்கும். ஏற்கெனவே தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நிதிப்பகிர்வில் இழப்பைச் சந்தித்து வருவதாக மாநில அரசு, ஒன்றிய அரசு மீது குற்றம் சாட்டி வருகிறது. பட்ஜெட் தாக்கலின் போதும் தமிழ்நாட்டிற்குப் போதுமான நிதியையும் திட்டங்களையும் ஒன்றிய அரசு தருவதில்லை.

அப்படி இருக்கையில், தொகுதி மறுவரையறை செய்யப்பட்ட பிறகு, மக்கள் தொகை அடிப்படையிலான திட்டங்களுக்கான நிதி மேலும் குறையவே வாய்ப்புள்ளது. இப்படிப் பல்வேறு வகைகளில் தென் மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டிற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேற்றும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும், தற்போது உள்ள பழைய நடைமுறையே தொடர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு விஜய் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## உதயநிதி சொத்து விவரம் வழக்கு:

# வருமான வரித் துறை பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஏப்.16

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் குறித்து விசாரணை நடத்தக் கோரிய வழக்கில், வருமான வரித்துறை பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களுக்கும், கடந்த 2021ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது தாக்கல் செய்த சொத்து விவரங்களுக்கும் முரண்பாடுகள் உள்ளதாகக் கூறி உதயநிதி ஸ்டாலின் போட்டியிடும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி வாக்காளரான குமாரவேல் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், கடந்த 2021ம் ஆண்டு தாக்கல் செய்த வேட்பு மனுவில் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனத்தில் 7 கோடியே 36 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருந்ததாக குறிப்பிட்டிருந்த உதயநிதி ஸ்டாலின், நடப்பு தேர்தலில் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில், இந்த விவரங்கள் குறித்து எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அவரது மனைவி ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனத்தில் 2 கோடியே 63 லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பரிவர்த்தனை குறித்து முறையான விளக்கங்கள் எதுவும் வேட்பு மனுவில் தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ம் ஆண்டு தாக்கல் செய்த வேட்பு மனுவில் 11 கோடியே 6 லட்சம் ரூபாய் ஸ்னோ ஹவுசிங் நிறுவனத்திற்கு கடன் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு இருந்த உதயநிதி ஸ்டாலின், 2026 ஆம் ஆண்டு வேட்பு மனுவில் ரூ.10 கோடி என குறிப்பிட்டு இருக்கிறார். மீதமுள்ள ஒரு கோடியே 6 லட்சம் பணம் திருப்பி செலுத்தப்பட்டதா என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கு முன் 2 கோடி ரூபாய் வருமானம் இருந்ததாக குறிப்பிட்டிருந்த உதயநிதி ஸ்டாலின் தற்போது 10 கோடியே 98 லட்சம் ரூபாய் வருமானம் உள்ளதாக குறிப்பிட்டு இருக்கிறார். வருமானம் மற்றும் சொத்து அதிகரித்தது கூறும் குறித்து உரிய விளக்கங்கள் தெரிவிக்கப்படவில்லை எனவும் சொத்து சொத்து அகுறித்து தவறான முழுமையற்ற தகவல்களை வேட்பாளர்கள் தெரிவிப்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு விரோதமானது என்பதால் இந்த முரண்பாடுகள் குறித்து விசாரணை நடத்த வருமான வரித் துறைக்கும், கார்ப்பரேட் விவகாரத் துறைக்கும் உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்து ள்ளார். ந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்ஏ தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, வேட்புமனுவில் தவறாக தகவல்கள் தெரிவித்தால், மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் நடைமுறைகள் துவங்கி விட்டதால், இந்த விவகாரத்தில் தேர்தல் வழக்கு தான் தாக்கல் செய்ய முடியும் என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மனுவுக்கு ஏப்ரல் 20ம் தேதிக்குள் பதிலளிக்கும்படி வருமான வரித் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை அன்றைய தினத்துக்கு தள்ளிவைத்தனர்.

# ரூ.8 ஆயிரம் கூப்பன் மாதிரிகளை பொதுமக்களுக்கு வினியோகிக்க கூடாது: தேர்தல் ஆணையம்

சென்னை, ஏப். 16

தமிழக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10ந் தேதியுடன் நிறைவடைகிறது. இதனையொட்டி, தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ந்தேதி வெளியிட்ட அறிவிப்பில், தமிழக சட்டசபைக்கான தேர்தல் ஏப்ரல் 23ந்தேதி ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என அறிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட பணிகளை முடித்து, தீவிர அரசியல் பிரசார பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்த நிலையில், கோவை தெற்கு, பர்கூர், பாலக்கோடு உள்ளிட்ட தொகுதிகளில் தி.மு.க.வினர் தேர்தல் நடத்தை விதிகளை மீறி வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் கூப்பன் வழங்கி வருவதாக அ.தி.மு.க. குற்றஞ்சாட்டியதுடன், தேர்தல் ஆணையத்தில் அதுதொடர்பாக புகார் அளித்துள்ளது.

அ.தி.மு.க. மாநில வழக்கறிஞரணி துணை செயலாளரான ஆர்.ஏ.எஸ். செந்தில்வேல் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பிய புகார் மனுவில் கூறியதாவது: தமிழகம் முழுவதும் பல்வேறு தொகுதிகளில் தி.மு.க.வினர் தேர்தல் நடத்தை விதிகளை மீறி வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள கூப்பன்களை சட்டவிரோதமாக வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி போட்டியிடும் கோவை தெற்கு, மதியழகன் போட்டியிடும் பர்கூர் மற்றும் செந்தில் குமார் போட்டியிடும் பாலக்கோடு உள்ளிட்ட தொகுதிகளில் வாக்காளர்களுக்கு ஆளுங்கட்சியான தி.மு.க. சார்பில் ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள கூப்பன்களை வழங்கி வருவது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி விதிமீறலாகும்.

தி.மு.க.வினர் தேர்தலில் குறுக்கு வழியில் வாக்குகளை பெறும் நோக்கில், தேர்தலுக்கு முன்பாகவே ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள கூப்பன்களை சீரியல் நம்பர்களுடன் வாக்காளர்களுக்கு டோக்கன்களாக வழங்கி வருவது தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது மட்டுமின்றி சட்டவிரோதமானதாகும்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவான நடவடிக்கை எடுத்து, இதுவரை வழங்கப்பட்ட கூப்பன்களை பறிமுதல் செய்து நேர்மையாக தேர்தல் நடத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். எனினும், இதற்கு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி சான்றிதழ் பெற்றுள்ளதாக தி.மு.க. சார்பில் தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி, தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் அளித்துள்ள விளக்கத்தில், தேர்தல் ஆணையம் வழங்கிய அந்த சான்றிதழ், மின்னணு ஊடகங்களில் விளம்பரங்களை ஒளிபரப்புவதற்காக வழங்கப்பட்டதாகவும், அச்சிடப்பட்ட பிரசுரங்களுக்கு பயன்படுத்துவதற்கு இது பொருந்தாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஈரோடு கிழக்கு தொகுதியில்

# அனைவருக்கும் இலவச வீட்டு மனை பட்டா வேட்பாளர் கோபிநாத் தேர்தல் அறிக்கை



ஈரோடு, ஏப்.15

ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிடும் கோபிநாத் தொகுதி முழுவதும் சென்று தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் தேர்தல் பணிமனையில் தேர்தல் அறிக்கை வேட்பாளர் கோபிநாத் முன்னிலையில் தொகுதி பொறுப்பாளர் நிரஜ் தான்கி எம்.பி. தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர் ஆர்.எம். பழனிசாமி ஆகியோர் வெளியிட்டனர். அதில் கூறியிருப்பதாவது அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் குடும்ப பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம் வழங்கப்படும். அரசுத்துறையில் 3 லட்சம் காலிப்பணியிடம் நிரப்பப்படும்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள அனைவருக்கும் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படும் என்பது உள்பட இன்னும் பல்வேறு வாக்குறுதிகள் அதில் கூறப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் மாநகர் மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜப்பா,மண்டல தலைவர்கள் சாம்ராட் அசோக், விஜய பாஸ்கர், முன்னாள் வட்டார தலைவர் செல்வராஜ், சிறு பான்மை பிரிவு மாவட்ட துணைத்தலைவர் பாஷா உள்பட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வேட்பாளர் கோபிநாத் கிருஷ்ணம் பாளையம் வண்டியூரான் கோவில் வீதி தண்ணீர் பந்தல் பாளையம் அருள் வேலன் நகர் மற்றும் பல்வேறு பகுதிகளில் வீதிவீதியாக சென்று ஓட்டு சேகரித்தார். அப்போது அவருக்கு ஆர்த்தி அடுத்த பெண்களிடம் கை சின்னத்தில் எனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்றும் நான் வெற்றி பெற்றால் உங்களது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் கேட்டுக் கொண்டார்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் அதிமுக சட்டமன்ற வேட்பாளர் செந்தில்குமாரை ஆதரித்து அதிமுக பேச்சாளர் காளியம்மாள் பரப்புரை மேற்கொண்டார்.

### தேவதானப்பட்டி பேரூராட்சி பகுதியில்

# பெரியகுளம் சட்டமன்ற (தனி) தொகுதி தவெக வேட்பாளர் சபரி ஐங்கரனை ஆதரித்து விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்



தேனி, ஏப். 16

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பேரூராட்சி பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் பெரியகுளம் சட்டமன்ற (தனி) தொகுதி வேட்பாளர் சபரி ஐங்கரனை ஆதரித்து, தேனி வடக்கு மாவட்ட செயலாளரும் போடி சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான பிரகாஷ் பொதுமக்களை நேரில் சந்தித்து விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

பெரியகுளம் அருகிலுள்ள தேவதானப்பட்டி பகுதியில் நடைபெற்ற இந்த பிரச்சாரத்தின் போது, கட்சியின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து பொதுமக்களிடம் விளக்கமளிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆறுஎரிவாயுசிலிண்டர்கள் வழங்குதல், பெண்களுக்கு மாதம் ரூ.2500 ஊக்கத்தொகை, 'அண்ணனின் சீர் வரிசை' திட்டம், மகளிர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வரும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்குப்பதிவில் பொதுமக்கள் அனைவரும் தளபதி விஜய் ஆதரவு வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், பெரியகுளம் மஞ்சளார் அணை பகுதியைச் சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர் காசிபாண்டி தலைமையில், மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு சார்பில்

# புரட்சியாளர் அம்பேத்கார் பிறந்தநாள் விழா



கோவை ஏப்:16

புரட்சியாளர் அம்பேத்கார்அவர்களின்பிறந்தநாள் விழாவினை சமத்துவ நாளாக கோவை திமுக தெற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சி கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வழக்கறிஞர் பஞ்சலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

பொள்ளாச்சி வடக்கு நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் பொள்ளாச்சி நகர மன்ற தலைவர் முனைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் பொள்ளாச்சி திமுக கூட்டணி வேட்பாளர் நித்தியானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுதிருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

# குடிப்பழக்கத்தால் தற்கொலை செய்து கொண்ட கூலி தொழிலாளி

சுசீந்திரம், ஏப். 16

சுசீந்திரம் அருகே உள்ள கோழிக்கோட்டு பொத்தை குமாரபுரத்தை சார்ந்தவர் ஐயப்பன் 56 இவர் மர ஆசாரி வேலை செய்து வருகிறார் நல்ல குடிப்பழக்கம் உடையவர்என்றெரிகிறது இதனால் அடிக்கடி வீட்டிற்கு குடித்துவிட்டு வந்து தனது மனைவி ஜெயஜோதிடம்36 தகராறு செய்வது வழக்கம் அதுபோல சம்பவத்தன்று நல்ல குடிபோதையில் வீட்டிற்கு வந்து தகராறு செய்துள்ளார் இதனால் அவரது மனைவி இவர் தூங்கிய பின்பு வீட்டிற்கு வரலாம் என வெளியே சென்று விட்டார் சிறிது நேரம் கழித்து வீட்டிற்கு வந்து பார்க்கும் பொழுது வீட்டின் முன்பக்க ரூமில் உள்ள மின்விசிறி ஊக்கில் தூக்கு போட்டு இறந்து கிடந்து உள்ளார் இது குறித்து ஐயப்பனின் மனைவி ஜெயஜோதி சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

### சென்னையில்

# கிரியேட் மெடிக் ஜப்பான் நிறுவனம் மருத்துவ கருவிகள் விற்பனை அலுவலகம் தொடக்கம்



சென்னை, ஏப்ரல் 16,

கிரியேட் மெடிக் நிறுவனம் சிலிக்கான் கதீட்டர் மற்றும் மருத்துவ கருவிகளை உற்பத்தி செய்யும் ஜப்பானிய நிறுவனம் சென்னையில் முதல் அலுவலகத்தை தொடங்கியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளாக, இந்நிறுவனம், சிறுநீரகவியல், இரைப்பை குடலியல், பி.இ.ஜி.பராமரிப்பு ஆகிய துறைகளில் முதன்மை வகிக்கிறது. நோயாளிகளின் சௌகரியத்தையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இந்நிறுவனம் மிக நவீனமாக சிலிக்கான் அடிப்படையிலான மருத்துவ கருவிகளை உற்பத்தி செய்து வருகிறது.

இவர்களது கருவிகள், ஜெர்மனி, பிரிட்டன், இந்தியா, இத்தாலி, கொரியா, சீனா, ஆஸ்திரேலியா, பிரேசில் உள்பட 50க்கு மேற்பட்ட நாடுகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

கிரியேட் மெடிக் கம்பெனியின் தலைவர் ஓசாமு இமாஸாவா பேசும்போது, "இந்தியாவில் எங்கள் கருவிகளை விற்பனை செய்வதற்கு என்று ஒரு தனி நிறுவனத்தை உருவாக்கியுள்ளோம். முன்னதாக நாங்கள், மெடி நிப்பான் என்ற எங்கள் வினியோகஸ்தர் வழியாக கருவிகளை விற்பனை செய்து வந்தோம். இப்போது நேரடியாகவே எங்கள் கருவிகளை நாங்களே விற்பனை செய்யவுள்ளோம். இந்தியாவில் மருத்துவ கட்டமைப்புகள் மிக வலுவாக உள்ளன, உலகப் புகழ்பெற்ற மருத்துவர்கள் உள்ளனர், மேலும், மக்களுடைய வாங்கும் சக்தியும் மேம்பாடு அடைந்துள்ளதால், இங்கே வளர்ச்சி விகிதம் 8 சதவிகிதம் வரைக்கும் இருக்கிறது. இதனால் எங்கள் மருத்துவ கருவிகளை விற்பனை செய்வதற்கான நல்ல சந்தையாக இந்தியாவை கருதுகிறோம். வருங்காலத்தில் இந்தியாவிலேயே கருவிகளை உற்பத்தி செய்யும் ஆலைகளைநிறுவி, இந்திய துணைக்கண்டம் மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் வரை எங்கள் பொருட்களை எடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

மேலும் கிரியேட் மெடிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கட்சுவாகி யாமனே இந்நிகழ்ச்சியில் உடனிருந்தார்.

### நாகர்கோவிலில் விபத்து

# பைக் , காரின் அடியில் சிக்கி இழுத்து செல்லப்பட்ட வாலிபர்



நாகர்கோவில், ஏப். 16

நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் சந்திப்பு பகுதியில் இருந்து பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி செல்லும் ரவுண்டானா நோக்கி நேற்று கார் ஒன்று வேகமாக சென்றது. இந்த கார் அந்த பகுதியில் உள்ள ஸ்காட் கிறிஸ்தவபள்ளிஅருகேசெல்லும்போதுஅந்தவழியாக உள்ள இணைப்பு சாலையில் இருந்து பைக் ஒன்று வந்தது. வேகமாக வந்த கார் பைக் மீது மோதியது. இதில் பைக்கை ஓட்டி வந்த வாலிபர் பைக் உடன் காரின் அடியில் சிக்கினார். சுமார் 50 அடி தூரத்திற்கு மேல் கார் அடியில் சிக்கிய வாலிபர் இழுத்து செல்லப்பட்டார்.அவர்ஹெல்மெட்அணிந்திருந்ததால் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார். பின்னர் பொதுமக்கள் சேர்ந்து காரக்குடியில் சிக்கி இந்த வாலிபரைமீட்டுதனியார்மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர்.

அந்த பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

வெட்டூர்ணிமடம் சந்திப்பதிலிருந்து பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி ரவுண்டான சந்திப்பு வரை சாலை பணிகள் செங்குத்தாக இறங்கும் தன்மை கொண்டது. இந்த சாலையில் இணைப்பு சாலைகள் ஏராளமாக உள்ளன. இணைப்பு சாலையில் இருந்து வரும் வாகனங்கள் அடிக்கடி இது போன்ற விபத்தில் சிக்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றது. எனவே இணைப்பு சாலை பகுதியில் பேரிகார்டு அல்லது வேகத்தடைகள் அமைத்து வாகனங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.



# சுரண்டையில் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

## திமுக வேட்பாளர் கலை கதிரவன் உறுதி

தென்காசி ஏப்ரல் 16

தென்காசி மாவட்டம் சுரண்டையில் அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்படும் என திமுக வேட்பாளர் மருத்துவர்கலைகதிரவன்பிரசாரத்தின்போதுஉறுதியளித்தார். தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் சுரண்டை நகராட்சி பகுதியில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் தலைமையில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். சென்ற இடங்களில் எல்லாம் ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது அவர் பேசியதாவது

சுரண்டைக்கு நகராட்சி அந்தஸ்தை வழங்கியது திமுக அரசு இப்பகுதி பொதுமக்களுக்கான தேவையான அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனது உறவினர்கள் இந்த பகுதியில் உள்ளனர். நான் என்றும் உங்களோடு தான் இருப்பேன். சுரண்டை நகராட்சியில் கூடுதல் கூட்டு குடிநீர் திட்டம் செயல் படுத்துவதற்கும் முதல் நிலை நகராட்சி அந்தஸ்து தரம் உயர்த்திடவும் ஏற்பாடு செய்யப்படும். வர்த்தகம் நிறைந்த சுரண்டை நகர பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும்கிடைக்கநடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் பழனி நாடார் எம்.எல்.ஏ., சுரண்டை நகராட்சி தலைவர் வள்ளி முருகன், சுரண்டை நகர திமுக பொறுப்பாளர் கணேசன், வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்கு மார் மற்றும் கூட்டணி கட்சியை சார்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்

# டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா



தருமபுரி ஏப்ரல் 16

தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சின் சார்பில் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு மாவட்டச் செயலாளர் ஜே பிரதாபன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள். இதில் இலளிகம் தியாகி ஆர். பி. நினைவு படிப்பககம் முன் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கட்சியின் மாவட்ட பொருளாளர் எ. அலமேலு தலைமை வகித்தார். மாவட்டக் குழு உறுப்பினர் ஜெ. காளியம்மாள் முன்னிலை வகித்தார். நிகழ்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ஜி. மாதையன்,மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி. இரவி,என். பி. ராஜி,ஜி. ராஜகோபால்,கே. லட்சுமணன்,எம். குமார்,ஜி. சம்பத் மற்றும் கோவிந்தன் ஆகியோர் கலந்துக் கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# தாமிரபரணி நதிஇணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும்

## அதிமுக ஆட்சி கடம்பூர் ராஜு பேச்சு



விளாத்திகுளம் ஏப்ரல் 16

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் சத்யாவை ஆதரித்து சின்னவநாயக்கன்பட்டி கிராமத்தில் முன்னாள் அமைச்சரும் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் ராஜு சின்னவநாயக்கன் பட்டி,புதுார் பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார், அப்போது புதுாரில் உள்ள சட்டமா மேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது பேசிய கடம்பூர் ராஜு கடந்த 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை விளாத்திகுளம் தொகுதியில் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செய்துள்ளோம், குறிப்பாக சின்னவநாயக்கன்பட்டி கிராமத்தில் புதிதாக தொடக்கப்பள்ளி அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்டது, மேலும் கடந்த அதிமுக ஆட்சியில் தாமிரபரணி வைப்பார் நதியணைப்பு திட்டம் செயல்படுத்த இருந்த நிலையில் திமுக ஆட்சி அமைந்ததால் அத்திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது,

அதிமுக ஆட்சி வந்த உடன் மீண்டும் தாமிரபரணி வைப்பார் நதி இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும், சின்னவநாயக்கன்பட்டியில் புதிதாக மேம்பாலம் அமைக்கப்படும். அதேபோல் மக்களுக்கான நல்லாட்சி அமைய வேண்டும் என்றால் மக்கள் அதிமுகவிற்கு வாக்களிக்க வேண்டும், கருணாநிதியின் குடும்பத்திற்கான ஆட்சி அமைய வேண்டும் என்றால் நீங்கள் திமுகவிற்கு வாக்களிக்க வேண்டும்.

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கு மாநில அரசு நிதி வழங்க முடியாது, மத்திய அரசினால் மட்டுமே நிதி வழங்க முடியுமென்று தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன், ஒன்றிய செயலாளர்கள் தனஞ்செயன்,தனவதி, மாவட்டத் துணைச் செயலாளர் வெம்பூரார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் மோகன், சிறுபான்மை நலப் பிரிவு சதீஷ், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மாவட்ட செயலாளர் ராஜகோபால், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரையில் அதிமுக வேட்பாளர் தமிழ் செல்வம் தீவிர வாக்கு சேகரிப்பு

## பொதுமக்கள் அமோக வரவேற்பு



கிருஷ்ணகிரி, ஏப். 16

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மத்தூர் தெற்கு ஒன்றியம் குன்னத்தூர், எட்டிப்பட்டி, முத்தம்பட்டி, மோட்டூர், கல்குமாரம்பட்டி, உள்ளிட்ட நாற்பதுக்கு மேற்பட்ட கிராமங்களில் அதிமுக சட்டமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான டி.எம். தமிழ் செல்வம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருக்கு செல்லும் இடமெல்லாம் பொதுமக்கள் பட்டாசு வெடித்தும் ஆரத்தி எடுத்தும் சிறப்பான வரவேற்பளித்தனர் அதேபோல அந்தந்த கிராமங்களில் உள்ள கூட்டணி கட்சியினர் பெருவாரியாக ஆதரவளித்து அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்து வருகின்றனர்.

மேலும் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் போது ஒவ்வொரு கிராமத்திற்கும் செய்த அடிப்படை வசதிகள் மற்றும் நற்பணிகள் குறித்தும் அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சாலைகள் பாலங்கள் பள்ளி கட்டிடங்கள் ஸ்மார்ட் வகுப்பறைகள் போன்றவை குறித்தும் எடுத்துக் கூறி பொதுமக்களிடையே வாக்கு சேகரித்து வருகிறார், மேலும் கல்குமாரம்பட்டி கிராமத்தில் பருத்தி தோட்டத்தில் களை பறித்துக் கொண்டிருந்த பெண்களுடன் சேர்ந்து நானும் களை பறித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அவருக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் அமோகமா ஆதரவளித்து வருகின்றனர்.



சட்ட மாமேதை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளையொட்டி காட்பாடி குடியாத்தம் சாலை சந்திப்பில் உள்ள அவரது சிலைக்கு விசிக மாவட்ட செயலாளர் வேலூர் பிலிப் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார். இதில் மாவட்ட துணை செயலாளர்கள் பிரேம்குமார், ஜீவா, பகுதி செயலாளர் ராஜ்குமார், செயற்குழு உறுப்பினர் முனுசாமி, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை நிர்வாகி தினகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருவரங்கம், கொழுந்துறை கிராமங்களில்

# அதிமுக வேட்பாளர் மலேசியா எஸ். பாண்டியன் வாக்கு சேகரிப்பு



முதுகுளத்தூர், ஏப்ரல்.16

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், அதிமுக வேட்பாளர் மலேசியா எஸ். பாண்டியன் திருவரங்கம், கொழுந்துறை உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரச்சாரத்தின் போது பொதுமக்களிடம் பேசிய அவர், “முதுகுளத்தூர் தொகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உறுதி எடுத்துள்ளேன். மக்கள் என்னை ஆதரித்து வெற்றி பெறச் செய்தால் குடிநீர் வசதி, சாலை வசதி, கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் செய்து தரப்படும். விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு குளம், ஏரி, குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகளைசீரமைத்துநீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்,” என்று தெரிவித்தார்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியின் போது திருவரங்கம் திருச்சபைக்கு சென்ற மலேசியா எஸ். பாண்டியனை அங்குள்ள பாதிரியார் வரவேற்றார்.

அப்போது பாதிரியார், “மலேசியா எஸ். பாண்டியன் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று மக்களுக்கு நல்ல சேவை செய்ய ஆண்டவன் அருள் புரியட்டும்” என்று ஆண்டவரிடம் சிறப்பு பிரார்த்தனை செய்தார். இந்த நிகழ்வில் அதிமுக நிர்வாகிகள், உள்ளூர் தலைவர்கள், கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு தேர்தல் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் அம்மன் கே அர்ஜுனன் ராமநாதபுரம்,ஸ்ரீபதி நகர்,80 அடி சாலை,நஞ்சுண்டாபுரம் சாலை,ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். பொதுமக்கள் தங்களுடைய குறைகளை கூறினர்.பின்பு உங்கள் குறைகளை பரிசீலனை செய்து தருகிறோம் எனக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்குமாறு கூறினார்.உடன் சிங்கை இராமச்சந்திரன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி கொடுமுடி பேரூராட்சிக்குட்பட்ட ஏமகவுண்டனூர் பகுதியில் பாகம் எண் 263 உட்பட்ட பகுதியில் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வாக்குச்சாவடிகளில் தேர்தல் நாளன்று 6 சட்டமன்ற தொகுதிகளில் பணியாற்றும் வாக்கு அலுவலர்களுக்கான 2ஆம் கட்ட பயிற்சி வகுப்புகள் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும் மையமான பாண்டவர்மங்கலம் நாடார் மேல்நிலைப் பள்ளியில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு, 53.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கட்டிகானப்பள்ளி புதிய வீட்டு வசதி வாரியம், 2 வது தெரு, பாகம் எண்.204ல், வாக்காளர் .சுந்தர் த/பெ.ராமமூர்த்திக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பூத் சிலிப் வாக்காளர் கையேட்டினை வழங்கினார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் .ஷாஜகான் உள்ளிட்ட பலர் உள்ளனர்

## தஞ்சை பெரியகோவிலில்

# வரும் 27ஆம் தேதி சித்திரை பெருவிழா தேரோட்டத்தையொட்டி பந்தல்கால் முகூர்த்தம்



தஞ்சாவூா், ஏப்ரல்.16

உலகப்புகழ்பெற்றதஞ்சாவூர்பெரிய கோயிலில், ஆண்டுதோறும் சதயவிழா, ஆஷாட நவராத்திரி விழா, சித்திரை பெருவிழா என பல்வேறு விழாக்கள் கொண்டாடப் பட்டு வருகின்றன.

இதில் சித்திரை பெருவிழா 18 நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டுக்கான சித்திரை பெருவிழாவுக் கான பந்தக்கால் முகூர்த்தம் கடந்த மாதம் 6ந்தேதி நடைபெற்றது .சித்திரை பெருவிழாவிற்கான கொடியேற்றம் நேற்று முன்தினம் நடந்தது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 27ம் தேதி நடைபெறுகிறது. இதனையொட்டி தஞ்சை மேல வீதியில் உள்ள பெரிய கோவில் தேர் நிலையில் பந்தக்கால் முகூர்த்தம் நேற்று காலை நடைபெற்றது. முன்னதாக பந்தக்காலுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டு தேரில் பந்தகால் நடப்பட்டது.

இதில் அறநிலையத்துறை உதவி ஆணையர் (பொ) கார்த்தி கேயன் மற்றும் கோயில் அதிகாரிக ள், பணியாளர்கள், திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். பின்னர், தேர் அலங்கார பணிகளை பணியாளர்கள் துவக்கினர். தேரின் சாதாரண உயரம் 19 அடி, அகலம் 18 அடியாகு ம். ஆனால், தேர் அலங்காரம் செய்யப்பட்டவுடன் 50 அடியாக காணப்படும். இதை போல், தேர் சாதாரண எடை 40 டன், அலங்காரம் செய்யப்பட்டவுடன் 43 டன் எடையாக இருக்கும் என கோயில் பணியாளர்கள்தரப்பில் தெரிவித்தனர்.

# சமூக விழிப்புணர்வு இயக்கம் மாநில தலைவர் வழக்கறிஞர் சாக்ரடீஸ் செய்தியாளர் சந்திப்பு



கோவை ஏப்:16

கோவை ஆடிஸ் சாலையில் உள்ள பத்திக்கையாளர் மன்றத்தில் செய்தியாளர்சந்திப்பு நடைபெற்றது. இதில் பேசியதாவது வரும் சட்டமன்ற தேர்தலில் சமூக விழிப்புணர்வு இயக்கம் மதசார்பற்ற ஜனநாயக திமுக கூட்டணியை ஆதரிக்கிறது. தொடர்ந்து பரப்புரையும் செய்து வருகிறது.

சில கிறிஸ்தவ அமைப்பு தலைவர்கள் அரசியல் கட்சிகளிடம் ஏமாற்றி பணம் பதவி வாங்க திட்டமிட்டு செயல்படுவதாக தெரிகிறது. பொதுவாக தி.மு.க.வுக்கு 80சதவீதம் கிறிஸ்தவர்கள் வாக்களிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

சிலர்சுயநலத்திற்தாகஉப்பிலிபாளையம் ஆலயத்தில் ஜெபகூட்டம் என்ற பெயரில் தேர்தல் விதி மீறி அரசியல் கூட்டம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது இது குறித்து தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்து உள்ளோம் என்று கூறினார்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் செந்தில்குமார் காந்திபுரம் 100 அடி சாலை,ஹட்கோ காலனி ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் உள்ள குறைகளை கேட்டறிந்து எங்களுக்கு வாக்களியுங்கள் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.பின்பு பொதுமக்களிடம் எங்கள் தலைவரிடம் உங்கள் குறைகளை சொல்லி குறைகளை தீர்க்க நாங்கள் வழி வகுப்போம் என்று கூறினார். உடன் தொண்டர்கள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்.

# கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு



கோவை ஏப்:16

கோவை உடையாம்பாளையம் பகுதியைச் சேர்ந்த இந்திராணி என்ற கூலித்தொழிலாளி அவரது அம்மா வழியில் தனக்கு சேர வேண்டிய சொத்தை ஒரு தனியார் நிறுவனம் மற்றும் உறவினர்கள் சேர்ந்து அபகரித்துக் கொண்டு வெளியேறச் சொல்லி பொய் வழக்குகள் புனைந்து குடும்பத்தை மிரட்டி வருவதாகவும் எங்களுக்கு சேர வேண்டிய பூர்வீக சொத்தை மீட்டு தரும்படியும் எங்கள் குடும்பத்தை தாக்கியவர்கள் மீது தக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும்எனஅதிகாரிகளிடம் காணொளி வாயிலாக கேட்டுக்கொண்டார் இவர்களுக்கான பூர்வீக சொத்தில் என்ன பங்கோ அதை பாதிக்கப்பட்ட இவர்களுக்கு அதிகாரிகள் முறையாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

## தஞ்சாவூரில்

# சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு

### மாவட்ட கலெக்டர் தலைமையில் நடந்தது



தஞ்சாவூர் ஏப்ரல் 16

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடந்தது. இதில்அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சமத்துவ நாள் உறுதி மொழியை ஏற்றனர் முன்னதாக அண்ணல் அம்பேத்கர்திருவுருவபடத்திற்குமாவட்டகலெக்டர் பிரியங்கா பங்கஜம் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## திருவையாறு அருகே

# மீன் வளர்ப்பு குட்டையில் பிடிபட்ட முதலை

### வனத்துறையினர் மீட்டு கொள்ளிடம் ஆற்றில் விட்டனர்





தஞ்சாவூர் ஏப்ரல் 16

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அடுத்துள்ள வெள்ளம்பெரம்பூர் கிராமத்தில் மீன் வளர்ப்பு குட்டையில் காணப்பட்ட முதலையை வனத்துறையினர் பிடித்து கொள்ளிடம் ஆற்றில் பாதுகாப்பாக விட்டனர்

தஞ்சாவூர் மாவட்டம் திருவை யாறு அடுத்துள்ள வெள்ளப்பெரம் பூர் கிராமம்.இந்த பகுதியைச் சேர்ந்தவர் சசிகுமார் .இவர் அந்த பகுதியில் மீன் வளர்ப்பு குட்டையை பராமரித்து வருகிறார் .இந்தநிலை யில் நேற்று மதியம் அந்த குட்டை யில் முதலை ஒன்று இருப்பது தெரியவந்தது

இதையடுத்து சசிகுமார் தஞ்சாவூர் மாவட்டம் பேரிடர் கால மீட்பு கட்டுப்பாட்டு அறைக்கு தகவ ல் அளித்தார். இதையடுத்து இந்த தகவலை அவர்கள் வனத்துறைக்கு தெரியப்படுத்தினர். தகவலின் படி மாவட்ட வன அலுவலர் கார்த்திகே யனி உத்தரவின்படி வன சரகர் ஜோதி குமார் மேற்பார்வையில், வனவர்இளைய ராஜா, வனகாவலர் வெற்றிவேல் ஆகியோருடன் அருங்கானுயிர் காப்பு மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளைநிறுவனசதீஷ்குமார்,ராஜேந்திரன், மீட்பாளர்கள் குலோத்துங்கள், விஸ்வ பிரேம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றனர்

அப்போது மீன் வளர்ப்பு குட்டை யில் இருந்த குட்டி முதலையை 1 மணி நேர போராட்டத்திற்கு பின் பிடித்தனர் .அந்த முதலை 110 செ.மீட்டர் நீளத்துடன் காணப்பட்டது மேலும் பெண் முதலையாக இருந் தது .நல்ல உடல் ஆரோக்கியத்துட ன் இருந்ததால், அந்த முதலையை பாதுகாப்பாக கொண்டு சென்று கொள்ளிடம் ஆற்றில் வனத்துறை யினர் விட்டனர்.



## நாகர்கோவிலில்

# குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காண கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்

### பாஜக வேட்பாளர் எம் ஆர் காந்தி பிரச்சாரம்

நாகர்கோவில், ஏப். 16

நாகர்கோவில்பாரதியஜனதாகட்சியின்வேட்பாளர் எம் ஆர் காந்தி எம்எல்ஏ நேற்று காலை வடசேரி காய்கறி சந்தை, அண்ணா சிலை சந்திப்பு, பஸ் நிலையப்பகுதிகளில்வாக்குசேகரிப்பில்ஈடுபட்டார் பின்னர். மேலும் பாரதிய ஜனதா வெளியிட்டு உள்ள தேர்தல்அறிக்கையை காட்டி எம் ஆர்காந்தி எம்எல்ஏ வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் கூறுகையில் கூறியதாவது:

தேசிய ஜனநாயகக் கூட்டணி தமிழ்நாட்டில் வெற்றி பெற்றால் மகளிருக்கு ரூ2000 உதவி தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தீபாவளி, பொங்கல், தமிழ் புத்தாண்டுக்கு தலா ஒரு சமையல் கியாஸ் சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். தைப்பூசவிழாமாநிலவிழாவாககொண்டாடப்படும். ஒரு முறை அனைத்து குடும்பத்திற்கும் ரூ.10,000 நிதி வழங்கப்படும் என்பது போன்ற போன்ற திட்டங்களை செயல் படுத்துவோம்.

நாகர்கோவில்மாநகரின்வளர்ச்சிக்கானதிட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்பப்படும். நாகர்கோவிலில் ஏற்படும் குடிநீர் பிரச்சனைகளுக்கு முழு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது புத்தன்அணை திட்டத்தின் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. ஆனாலும் மாநகரம் முழுவதும் தற்போது குடிநீர் பிரச்சினை உள்ளதால், பல பகுதியில் குடிநீர் சரியாக கிடைக்கவில்லை என்கிறார்கள். எங்கள் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் நாகர்கோவில் மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க கடல் நீரை குடிநீர் ஆக்கும் திட்டம் கொண்டு வரப்படும். நாகர்கோவிலில் மீண்டும் பாரதிய ஜனதா தான் வெற்றி பெறும் என்று கூறினார். இந்த பிரச்சாரத்தின் போது பாரதிய ஜனதா அதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர்.

## அரூர் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிகளில்

# கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அன்புமணி வாக்கு சேகரிப்பு





தருமபுரி ஏப்ரல் 16

தருமபுரி மாவட்டம் அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிகளில் தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் சம்பத்குமார், மரகதம் வெற்றி வேல் ஆகியோரை ஆதரித்து பாட்டாளி மக்கள் கட்சியின் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது ஒகேனக்கல்லில் இருந்து கடலில் வீணாக கலக்கும் உபரி நீரை மீன் மோட்டார் மூலம் ஏரி, குளங்களில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். தென்பெண்ணை ஆற்றின் ஈச்சம்பாடியில் தடுப்பணை கட்டி மின் மோட்டார்கள் மூலம் ஏரி, குளங்களில் நீர் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். தருமபுரி மொரப்பூர் ரயில்வே திட்டம் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். இதில் அதிமுக, பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# ஓசூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் சத்யா தெலுங்கு மொழியில் வாக்குகள் சேகரித்தார்

ஓசூர் ஏப்ரல் 17

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அசோக் கார்டன், ஆவலப்பள்ளி, தட்ட கானப்பள்ளி, சித்தன்னப்பள்ளி, நந்திமங்கலம், எம்.காரப்பள்ளி, மாவத்தூர், அளேநத்தம், உள்ளிட்ட கிராமம் கிராமமாக சென்று திமுக வேட்பாளர் எஸ்.ஏ சத்யா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

ஒவ்வொரு கிராமங்களிலும் கிராம மக்கள் பட்டாசு வெடித்து மேளதாளங்களுடன் மாலை அணிவித்து வரவேற்றனர். பின்னர் தெலுங்கு மொழியில் பேசி மக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் ஐந்தாண்டு காலங்களில் கட்டணமில்லா விடியல் பயணம் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் கலைஞர் உரிமைத்தொகை உள்ளிட்ட ஏராளமான நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் தேர்தல் வாக்குறுதிகளையும் குறிப்பாக கிராமப்புறங்களில் பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்தியது திமுக அரசு தான் எனவே மீண்டும் மு க ஸ்டாலின் தமிழ்நாடு முதலமைச்சராக திட்டப் பணிகள் தொடர ஓசூர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் எஸ் ஏ சத்யாவுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கிராம மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் வாக்கு சேகரிக்க வந்த வேட்பாளர் சத்யா அவர்களுக்கு வழி நெடுகிலும் பட்டாசுகள் வெடித்து மேல தாளத்துடன் மலர் தூவி ஆரத்தி எடுத்து வாழ்த்துக்களை தெரிவித்து எங்கள் வாக்கு உதயசூரியனுக்கு என வாழ்த்துக்கள் தெரிவித்தனர்



# எடப்பாடி பழனிசாமியுடன் சந்திப்பு!

கன்னியாகுமரி, ஏப். 16

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கன்னியாகுமரி மாவட்ட தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடியுடன் ரோடு ஷோவில் கலந்து கொள்ள அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று கன்னியாகுமரி மாவட்டம் வந்தார். அவரை கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்று கன்னியாகுமரி தொகுதி அதிமுக வேட்பாளர் என்.தளவாய்சுந்தரம் வெற்றிக்காக கடினமாக போராடுவேன் எனவும், மாவட்டத்தில் ஏனைய தொகுதிகளில் அதிமுக, பாஜக கூட்டணி வெற்றிக்கு கலப்பை மக்கள் இயக்கம் தீவிரமாக பணியாற்றும் என பி.டி. செல்வகுமார் வாக்குறுதி அளித்தார். உடன் கன்னியாகுமரி தொகுதி அதிமுக வேட்பாளர் தளவாய்சுந்தரம் உள்ளார்

# தி.மு.க., சொல்வதை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது: மதியழகன் எம்.எல்.ஏ.,



கிருஷ்ணகிரி, ஏப். 16

“தி.மு.க., ஆட்சியில் சொல்வதை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் மக்களுக்கு செய்து கொடுத்துள்ளோம்,” என மதியழகன் எம்.எல்.ஏ., பேசினார். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதி, தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பர்கூர், போச்சம்பள்ளி, புளியம்பட்டி சுற்றுவட்டாரத்தை சேர்ந்த, 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரசாரம் மேற்கொண்டார். பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர்களை தூவியும் அவரை வரவேற்றனர்.

அப்போது, பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

கடந்த, 5 ஆண்டுகளில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை தந்துள்ளார். அன்புக்கரங்கள் என்ற திட்டம் மூலம் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும் தாயுள்ளத்தோடு உதவுகிறார். கருணை உள்ளம் கொண்ட அவரது, அடுத்த ஆட்சியில் காலை உணவு திட்டம், 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படவுள்ளது. 8,000 ரூபாய் கூப்பன் வழங்கப்படவுள்ளது. அதில், மக்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்கலாம். பண்டிகை காலங்களில் ஆபரில் பொருட்கள் எடுத்தால், 16,000 ரூபாய் மதிப்பு பொருட்கள் கூட கிடைக்கலாம்.இங்கே சில ஓட்டு வீடுகள் கண்ணுக்கு தெரிகிறது.

அவை அனைத்தும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் கலைஞர் கனவு இல்லமாக மாறும். ஏனெனில், 10 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டித்தரப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். எண்ணற்ற திட்டங்கள் வாக்குறுதிகளாக வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க., ஆட்சியில் சொல்வதை மட்டும் அல்ல, சொல்லாததையும் செய்து காட்டி உள்ளோம். உங்கள் பகுதியிலேயே புதிய ரேஷன் கடை, துணை சுகாதார நிலையம், பஸ் ஸ்டாப், சாலை வசதிகள் என கேட்டதெல்லாம் எம்.எல்.ஏ.,வாக இருந்து நான் செய்து கொடுத்துள்ளேன். எனக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நான் வெற்றி பெற்று, தி.மு.க., தலைவர் ஸ்டாலின் மீண்டும் முதல்வராக அமர்ந்தவுடன் மேலும் பல திட்டங்களை செய்வேன். பர்கூர் தொகுதிக்கு மட்டும், 400 கோடி ரூபாய் அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. நலத்திட்டங்கள் தொடர்ந்திட, தி.மு.க., அரசை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவது உங்கள் பொறுப்பு. இவ்வாறு அவர் பேசினார்.



2026 சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி முனிசிபல் காலனி பகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களிடம் தபால் ஓட்டு பெறும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.


**FORMAT C-1**

**(forcandidatetopublishinNewspapers,TV)**

**DeclarationaboutCriminal Cases**

( As per the judgement dated 25th september, 2018, of Hon'ble Superme Court in WP(Civil) No. 536 of 2011( Publish Interest Foundation & Ors, Vs, Union of India & Anr)

NameandAddressofCandidate : B.Sheik bareeth, S/O.Babu,No:39,Asathstreet, asanath puram, DindigulWest,Dindigul- 624002.

Nameof PoliticalParty : TamilagaValvurimaiKatchi

Name of Election : TAMILNADU LEGISLATIVE ASSEMBLYGENERALELECTION-2026

Nameof Constituency : 132 DINDIGUL

IS.ALEX(Nameofcandidate),acandidatefortheabovementionedelection,declareforpublic information the following details about my criminal antecedents.

(A)PendingCriminalCases

| S.No | Name of court | Case No. And Dated | Statusof case (S) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Nil | Crimeno: 0060/2022 | REFERRED | IPC143,341(TOWNSOUTHPS DINDIGUL) |
| 2 | Nil | Crimeno: 0623/2018 | REFERRED | CRPC151,(TOWNNORTHPS DINDIGUL) |
| 3 | Nil | Crimeno: 0160/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 4 | Nil | Crimeno: 0145/2022 | REFERRED | CRPC151, (TOWNSOUTHPSDINDIGUL) |
| 5 | Nil | Crimeno: 0130/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 6 | Nil | Crimeno: 0401/2024 | PENDINGTRIAL | IPC294(B),324,506(2),(TOWN NORTHPS DINDIGUL) |

**(B)Detailsaboutcasesofconvictionforcriminaloffences**

| S.No | NameofCourt& date(s)oforders(s) | Descriptionofoffence(s)& Punishmentimposed | Maximum Punishmentimposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |
| 2 | Nil | Nil | Nil |
| 3 | Nil | Nil | Nil |

*In the case of election to councilof states or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.

Note:

(i) TheParticularsregardingcriminalcasespendingagainstthecandidateshallbein bold letters.


**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.